4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஒ) தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2011

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

6. தகவல் கோரல்

பரமக்குடி, போலீஸ் துப்பாக்கிச் சூட்டில் இறந்தோர் குடும்பத்திற்குக் கூடுதல் நிவாரணத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன்னால் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியிலே மாவீரன் விக்டர் இம்மானுவேலின் குருபூஜை நிகழ்ச்சியின்போது நடந்த அசம்பாவிதங்களினால் துர்பாக்கியவசமாக நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டில் சிலர் பலியானார்களென்பது ஒரு வருத்தத்திற்குரிய, வேதனைக்குரிய நிகழ்வு. இதைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையை உயர்த்தித் தர வேண்டுமென்றும், அரசு அந்த நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவரவும், சமூக நல்லிணக்கத்தை உருவாக்கவும், சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்றாலும், மக்களும் அதிலே பங்கேற்கிற வகையிலே அமைதிக் குழுக்களை உருவாக்கவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் உற்ற தோழராக, அவர்களுக்கு உதவி புரிவதிலே தன்னிகரற்ற முதலமைச்சராக விளங்குகிற அவர்கள், இதுகுறித்து (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு விளக்கத்தை அளிக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்குமுன்பு பரமக்குடியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்தது குறித்து இந்த அரசும் மிகுந்த வருத்தம் அடைந்திருக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது. ஏற்கெனவே எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் நீதி விசாரணை வேண்டுமென்று கோரினார்கள். அவர்களுடைய வேண்டுகோளையேற்று, அவர்களுடைய கோரிக்கையையேற்றுக் கொண்டுதான், உயர்*